

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2024) கொளத்தூர், பள்ளி சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 8 கோடியே 45 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 3 கோடியே 25 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள சென்னை துவக்கப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2024) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் கொளத்தூர், வீனஸ் நகரில் 19 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட கழிவுநீர் வெளியேற்று நிலையத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### மக்களைத் தேடி மருத்துவம் 4 ஆம் ஆண்டு தொடக்க விழா!

# 2 கோடி பயனாளிகளுக்கு விரைவில் சிகிச்சை வழங்கும் சிறப்பை பெறும்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஆக 6-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (05.08.2024) சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நேரு நகரில், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் 4 ஆம் ஆண்டு தொடக்கத்தை முன்னிட்டு பயனாளர்களின் இல்லத்திற்கே சென்று மருந்து பெட்டகம் வழங்கி, இந்த திட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய சுகாதார பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் விருதுகளை வழங்கினார். பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது;

**மக்களைத் தேடி மருத்துவம் – 4 ஆம் ஆண்டு தொடக்கம்**

மருத்துவத்தை தேடி தான் மக்கள் செல்வார்கள், ஆனால் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உலகிலேயே முதன்முறையாக மக்களைத் தேடி மருத்துவம் என்கின்ற ஒரு மகத்தான சீர்மிகு திட்டத்தை 05.08.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம் சாமனப்பள்ளியில் தொடங்கி வைத்தார்கள். இந்த திட்டம் மக்களுடைய வீடுகளுக்கே தேடிச் சென்று மருத்துவ சேவைகளான உயர் இரத்த அழுத்தம் (BP), நீரிழிவு நோய் சிகிச்சை (Diabetes), உயர் இரத்த அழுத்த மற்றும் நீரிழிவுநோய் சிகிச்சை (BP and Diabetes), நோய் ஆதரவு சிகிச்சை (Palliative Care), இயன்முறை சிகிச்சை (Physio therapy), சிறுநீரக நோய்க்கு சுய டயாலிஸ் செய்து கொள்வதற்குத் தேவையான பைகள் வழங்குவது என்று 6 வகையான நோய்களுக்கு தேவையான மருத்துவ உதவிகள் வழங்கும் திட்டமாகும். உலகளவில் 6070% மக்கள் தொற்றா நோயினால் பாதிக்கப்படுகிறார்கள், அவர்களை காப்பாற்றும் உன்னதமான திட்டமான மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் இதுவரை 1,86,13,872 பேர் பயனடைந்துள்ளனர். இதில் உயர் இரத்த அழுத்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் 92,59,821 பேர், நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் 46,54,595 பேர், உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் இரண்டு நோயினாலும் பாதிக்கப்பட்டவர்கள் 41,39,328 பேர், நோய் ஆதரவு சிகிச்சை தேவைப்பட்டவர்கள் 4,84,889 பேர், இயன்முறை சிகிச்சை (Physio therapy) தேவைப்பட்டவர்கள் 6,59,576 பேர், டயாலிசிஸ் பைகள் வழங்கப்பட்டவர்கள் 399 பேர் என்று ஆக மொத்தம் 1,86,13,872 பேர் இந்த திட்டத்தில் பயனடைந்துள்ளனர். மேலும் 10,969 சுகாதார தன்னார்வலர்கள், 463 நோய் ஆதரவு சிகிச்சை செவிலியர்கள், 463 இயன்முறை சிகிச்சையாளர்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் 2892 செவிலியர்கள் இந்த மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். இந்த திட்டம் தற்போது 3 ஆண்டுகளை முழுமையாக கடந்து 4 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது, மிக விரைவில் 2 கோடி பயனாளிகள் என்ற இலக்கை அடையவுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தை தொடங்கி வைக்கும்போது, முதல் பயனாளிக்கு மருந்து பெட்டகத்தை தந்து, 1 கோடி பயனாளிகளை இந்த திட்டம் சென்றடைய வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள், அது தற்போது 1.86 கோடி பயனாளிகளை கடந்து 2 கோடியாவது பயனாளியை நோக்கி சென்றுக்கொண்டிருக்கிறது.

**சென்னை மாநகராட்சியில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்**

கிராமப்புறங்களில் 100% பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைகளை அளிக்க முடியும் ஆனால் நகர்புறங்களில் குறிப்பாக சென்னையை பொறுத்தவரை இந்த திட்டத்தை கொண்டு செல்வது சவாலான விஷயமாகும். ஆனால் இதில் நமது பொது சுகாதாரத் துறை சிறப்பாக செயல்பட்டு, தகுதி படைத்த மக்கள் தொகை (Eligibility Population) 58,94,860 என்று கண்டறியப்பட்டு, அதில் இதுவரை 53,05,373 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் சென்னையில் மட்டும் இரத்த அழுத்த நோய் பாதிப்புகளுக்கு உள்ளானவர்கள் 6,03,250 பேர், நீரிழிவு நோய் பாதிப்பு இருந்தவர்கள் 3,65,679 பேர், இரண்டும் சேர்ந்து இருந்தவர்கள் 3,03,203 பேர், இயன்முறை சிகிச்சை தேவைப்பட்டவர்கள் 14,066 பேர், நோய் ஆதரவு சிகிச்சை 8,038, டயாலிசிஸ் பைகள் வழங்கப்பட்டவர்கள் 77 பேர் இந்த திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். மேலும், சென்னையில் அடுக்குமாடி குடியிருப்புகளில் இருப்பவர்களையும் அணுகி அவர்களுக்கும் இந்த திட்டத்தை கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. அடுக்குமாடி குடியிருப்புகளில் யாருக்காவது மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் உதவிகள் தேவைப்பட்டால் 104 என்ற அவசர உதவி எண்ணை அழைத்தால் உடனடியாக அவர்களுக்கு தேவையான உதவிகள் செய்து தரப்படும்.

**தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம்**

வீடுகளில் இருக்கும் ஆண்கள் பெரும்பாலானோர் தொழிற்சாலைகளுக்கு வேலைக்கு சென்று விடுவதால் இந்த திட்டத்தின் பயன் கிடைக்காமல் இருந்ததை போக்கிடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கடந்த நிதிநிலை அறிவிப்புகளில் தொழிலாளரை தேடி மருத்துவம் திட்டம் அறிவிக்கப்பட்டு 09.01.2024 அன்று திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் வட்டாரத்தில் உள்ள Hyundai Mobis தொழிற்சாலையில் தொடங்கி வைக்கப்பட்டது. அந்த திட்டத்தின்படி இதுவரை 609 தொழிற்கூடங்களில் இதுவரை 3,05,300 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, 11,695 பேருக்கு ஏற்கனவே தொற்றா நோய் பாதிப்புகள் உள்ளவர்களாகவும், புதியதாக நோய் பாதிப்புகளுக்கு உள்ளானவர்கள் 26,861 பேரும் கண்டறியப்பட்டு தேவையான சிகிச்சைகள் வழங்கப்படுகிறது. இந்த திட்டம் கிண்டி, அம்பத்தூர் புதியதாக உருவாகி வரும் திருமுல்லைவாயில் போன்ற தொழிற்பேட்டைகளில் எல்லாம் 100 % தொழிலாளர்கள் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப் படவுள்ளது.

**வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

வடகிழக்கு பருவ மழை தொடங்கியுள்ள நிலையில் டெங்கு பாதிப்புகள் கட்டுக்குள் உள்ளது. மேலும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் ஒருங்கிணைந்து பல்வேறு பணிகளை செய்து வருகிறது. கடந்த வாரம் பருவமழையின் போது கடைபிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சி ஜி.எஸ்.டி நகரில் நடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சியை சேர்ந்த மாவட்ட அளவிலான நிர்வாகிகள், நகர்புறத்தை சேர்ந்த மாவட்ட அளவிலான நிர்வாகிகள், மக்கள் நல்வாழ்வுத் துறை அலுவலர்கள், ஒருங்கிணைந்து கூட்டம் நடத்தி பருவ மழைக்கு முன்னர் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த கூட்டம் கடந்த காலங்களில் நடத்தப்பட்டதை போன்று இந்த ஆண்டும் நடத்தப்படவுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியை பொறுத்தவரை 3,300 பேர் கொசு ஒழிப்பு பணிகளான கொசு மருந்து அடிப்பது, புகை மருந்து அடிப்பது போன்ற பணிகளில் தினந்தோறும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மடிப்பாக்கம், ராம்நகர், புழுதிவாக்கம், உள்ளகரம் போன்ற பகுதிகளில் மழைநீர் வடிகால் பணிகள் முன்னரே தொடங்கி வைக்கப்பட்டு நடந்து கொண்டிருக்கிறது. இந்த பணிகளுக்குகாக சாலைகள் வெட்டுப்பட்டது. தற்போது 90% பணிகள் முடிவுற்றுள்ளது. சாலைகள் அமைக்கும் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் திரு.ஜெய சந்திர பானு ரெட்டி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, பெருநகர சென்னை மாநகராட்சி நகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், மண்டல குழுத் தலைவர் துரைராஜ், கிருஷ்ணமூர்த்தி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், துணை இயக்குநர், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் உடனிருந்தனர்.

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

**கீழ்காணும் பணியினை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (Mech/,Q.C) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது**

**இ.பொ.து.ந.க.எண். எம்1/1686/2024.**
**3 எண்ணிக்கையில் அனைத்து விதமான நிலப்பரப்பிலும் இயக்கக்கூடிய ரோந்து வாகனம் (All Terrain Vehicle-ATV) கொள்முதல் செய்யும் பணி.**

முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : **13.08.2024 பிற்பகல் 3.00, மணி**

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **14.08.2024 பிற்பகல் 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு : **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2809 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் (இ / த.க.,)**

### நான்காம் கட்டமாக

# அறுபடை வீடு ஆன்மிகப் பயணம் நாளை தொடங்குகிறது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஆக.6

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் செயல்படுத்தப் படும் மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் நான்காம் கட்டப் பயணம் சுவாமிமலை, சுவாமிநாத சுவாமி திருக்கோயிலிலிருந்து 07.08.2024 அன்று தொடங்க வுள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆகியவற்றிற்கு ஆன்மிகப் பயணம் சென்று வருபவர்களுக்கு ஆண்டுதோறும் மானியம் வழங்கப் பட்டும், ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவ திருத்தலங்களுக்கும் சுற்றுலாத்துறையுடன் இணைந்து ஆன்மிகப் பயணம் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டும் வருகிறது. மேலும் இராமேசுவரத்திலிருந்து காசிக்கு ஆன்மிகப் பயணமாக கடந்த இரண்டாண்டுகளில் 500 மூத்த குடிமக்கள் கட்டணமில்லாமல் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

தமிழ் கடவுள் என்று போற்றப்படுகின்ற முருகப் பெருமான் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர் சோலை ஆகியவற்றிற்கு மூத்த குடிமக்கள், கட்டணமில்லாமல் ஒரேமுறையாக சென்று தரிசனம் செய்திடும் வகையில் 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட 200 பக்தர்கள் வீதம் ஆண்டிற்கு 5 முறை அதாவது 1,000 பக்தர்களை அழைத்து சென்று தரிசனம் செய்து வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி முதற் கட்டப் பயணம் சென்னை, கந்தக்கோட்டத்திலிருந்தும், இரண்டாம் கட்டப் பயணம் பழநியிலிருந்தும், மூன்றாம் கட்டப் பயணம் திருச்செந்தூரிலிருந்தும் புறப்பட்டன. இந்த ஆன்மிகப் பயணத்தில் இதுவரை 607 மூத்த குடிமக்கள் பயன்பெற்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 200 மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் அறுபடை வீடு ஆன்மிகப் பயணம் சுவாமிமலையிலிருந்து புறப்படப்பட உள்ளது.

இந்த ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்கும் மூத்த குடிமக்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வசதிகளுடன் போர்வை, துண்டு, குளியல் சோப், டூத் பிரஷ், பேஸ்ட், முகம் பார்க்கும் கண்ணாடி, தேங்காய் எண்ணெய், சீப்பு போன்ற பொருட்கள் அடங்கிய பயணவழிப் பைகள் வழங்கப்படுகின்றன.

மேலும், அவர்களுக்கு உதவியாக செயல் அலுவலர்கள், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் மருத்துவ குழுவினரும் உடன் செல்கின்றனர். இந்த நான்காம் கட்டப் பயணம் சுவாமிமலையில் தொடங்கி திருத்தணி, பழனி, திருப்பரங்குன்றம், பழமுதிர் சோலை, ஆகியவற்றிற்கு சென்று திருச்செந்தூரில் நிறைவடைகிறது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

### முதலமைச்சரின் 1 டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியை 2030க்குள் எய்திட - தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத் துறை சிறப்பாகச் செயலாற்றி வருகிறது!

# ‘சிப்காட்’ இல்லாத மாவட்டங்களில் புதிதாக ‘சிப்காட்’ வளாகம் அமைக்க நடவடிக்கை!

## ‘சிப்காட்’ திட்ட அலுவலர்கள் - பொறியாளர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா உறுதி!

சென்னை, ஆக 6-

**‘சிப்காட்’ தொழிற் பூங்காங்களின் திட்ட அலுவலர்கள், பொறியாளர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் பேசிய தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, “முதலமைச்சரின் 1 டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியை 2030க்குள் எய்திட - தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத் துறை சிறப்பாகச் செயலாற்றி வருகிறது” என்றும் - “தமிழ்நாட்டில் ‘சிப்காட்’ வளாகங்கள் இல்லாத மாவட்டங்களில் புதிதாக ‘சிப்காட்’ வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்” என்றும் குறிப்பிட்டார்.**

அதன் விபரம் வருமாறு:முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தொழில் துறையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கின்ற வகையில் தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநிலங்கள் மற்றும் உலக அளவிலான தொழில் முதலீட்டாளர் கள், தொழில் நிறுவனங் கள் தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்கிட புதிய முதலீட்டு ஒப்பந்தங் கள் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில், தமிழ்நாட்டில் புதிய சிப்காட் தொழில் பூங்காக்கள் அமைத்தல், தொழில் முதலீடுகள், நிலம் கையகப்படுத்துதல் பணி முன்னேற்றம் மற்றும் தொழில் பூங்காக்களில் உட்கட்டமைப்புகள் மேம்படுத்துதல் தொடர்பாக, அனைத்து சிப்காட் தொழிற் பூங்காக்களின் திட்ட அலுவலர்கள், தனி மாவட்ட வருவாய் அலுவலர்கள் (நில எடுப்பு) மற்றும் பொறியாளர்களுடனான ஆய்வுக்கூட்டம் நேற்று (05.08.2024) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்கு திட்டமான ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியினை 2030-க்குள் எய்திடும் வகையில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சிறப்பாக செயலாற்றி வருகிறது.

தொழில் வளர்ச்சியே ஒரு நாட்டின் வளர்ச்சியாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் தொழில் தொடங்க வேண்டும் என்றால் தமிழ்நாடுதான் சிறந்தது என்பதை அடையாளப்படுத்த வேண்டும். தமிழ்நாடு தொழில் தொடங்குவதற்கான முன்னோடி மாநிலமாக திகழ வேண்டும் என முதலமைச்சர் இந்தத் துறையை தனது கண்காணிப்பில் வைத்துள்ளார். இதற்காக பல்வேறு திட்டங்களையும் அறிவித்துச் செயல்படுத்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான தகுந்த இடங்களை ஆய்வு செய்ய வேண்டும். தமிழ்நாட்டை தொழில் தொடங்க சிறந்த மாநிலமாக அடையாளப்படுத்துவது அலுவலர்களின் கடமை. ‘சிப்காட்’ வளாகங்கள் இல்லாத மாவட்டங்களில் புதிதாக ‘சிப்காட்’ அமைப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் மற்றும் சட்டமன்ற மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திடவும், நடைபெறவுள்ள பணிகளுக்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு சிறப்பாக முடித்து விரைந்து பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஒருங்கிணைந்து சிறப்பாகப் பணிபுரிய வேண்டும்.

தொழில் முதலீட்டா ளர்கள் மற்றும் தொழில் முனைவோர் வசதிக்காக சிப்காட் BIZ BUDDY HELPLINE எண் வசதி 9894322233 ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தொழில் முதலீட்டாளர் கள் மற்றும் தொழில் முனைவோர் வேண்டுகோளை ஏற்று மாதந்தோறும் முதல் திங்கள் கிழமை நடத்தப்பட்டு வந்த BIZ BUDDY - கூட்டம் இனி வரும் காலங்களில் மாதந்தோறும் இரண்டாவது வெள்ளிக்கிழமை நடத்தப்படும் - என அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சிப்காட் மேலாண்மை இயக்குநர் மரு. கி.செந்தில் ராஜ், சிப்காட் செயல் இயக்குநர் திருமதி டி.சிநேகா, சிப்காட் திட்ட அலுவலர்கள், தனி மாவட்ட வருவாய் அலுவலர்கள் (நில எடுப்பு) மற்றும் பொறியாளர்கள் கலந்துக்கொண்டனர்.

### நெல்லை மாநகராட்சி புதிய மேயராக

# 25 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோ.ராமகிருஷ்ணன் தேர்வு!

## மாநகராட்சி ஆணையாளர் என்.ஓ.சுகபுத்ரா அறிவிப்பு!

நெல்லை, ஆக.6-

நெல்லை மாநகராட்சி புதிய மேயராக 25 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோ.ராமகிருஷ்ணன் தேர்வு செய்யப்பட்டார். அதற்கான அறிவிப்பை மாநகராட்சி ஆணையாளர் என். ஓ.சுகபுத்ரா தெரிவித்தார்.

நெல்லை மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன் கடந்த 3ஆம் தேதி தனது பதவியை சொந்த காரணங்களுக்காக ராஜினாமா செய்தார்.அதனைத் தொடர்ந்து காலியாக உள்ள திருநெல்வேலி மாநகராட்சி மேயர் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் உத்தரவுபிறப்பித்தது. மேயர் வேட்பாளராக கோ.ராமகிருஷ் ணனை தலைமைக் கழகம் அறிவித்தது.



அதன்படி நெல்லை மாநகராட்சி மைய மண்டபத்தில் நேற்று 5ஆம் தேதி காலை 10 30 மணி அளவில் தேர்தலுக்கான வேட்பு மனு துவங்கப்பட்டது.மேயர் வேட்பாளர் ராமகிருஷ்ணன் தனது வேட்புமனுவை மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ராவிடம் தாக்கல் செய்தார்.அவரை எதிர்த்து 6 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பவுல்ராஜ் (கட்சியிலிருந்து தற்காலிகமாக சஸ்பெண்ட் செய்யப்பட்டவர்) வேட்பு மனு தாக்கல் செய்தார்.

காலை 11:30 மணிக்கு மேல் வாக்குப்பதிவு நடைபெற்றது. மொத்தம் உள்ள 55 மாமன்ற உறுப்பினர்களில் தி.மு.க கூட்டணிக்கு 51 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் கழக உறுப்பினர்களாக 41 பேர் உள்ளனர்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற மேயர் தேர்தலில் 1மாமன்ற உறுப்பினர் தவிர 54 மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.கழக வேட்பாளர் ராமகிருஷ்ணன் 30 வாக்குகளும், பவுல்ராஜ் 23 வாக்குகளும் பெற்றனர், 1 வாக்கு செல்லாதவை என்று அறிவிக்கப்பட்டது.

பின்னர் மாநகராட்சி ஆணையர் சுகபுத்ரா கழக வேட்பாளர் கோ. ராமகிருஷ்ணன் வெற்றி பெற்றதாக அறிவித்தார்.அதனைத் தொடர்ந்து அதற்கான சான்று வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், துணை மேயர் ராஜ், முன்னாள் மேயர் சரவணன் உள்பட மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோவை மாநகராட்சி மேயர் தேர்தல்

# தி.மு.க. சார்பில் ரங்கநாயகி போட்டி!

கோவை, ஆக.6-

கோவை மாநகராட்சியின் மேயர் தேர்தல் இன்று (6ந்தேதி) நடைபெற உள்ளது. இந்நிலையில், கோவை சுகுணா திருமண மண்டபத்தில் அமைச்சர்கள் கே.என். நேரு, முத்துச்சாமி ஆகியோர் தலைமையில் மாமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து, கோவை மாநகராட்சியின் தி.மு.க. கூட்டணியின் மேயர் வேட்பாளராக, 29 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரங்கநாயகி அறிவிக்கப்பட்டார்.



தரணி நகர் 8 வது வீதி, கணபதிபுதூர் பகுதியைச் சேர்ந்த 29 வார்டு மாமன்ற உறுப்பினராகிய ரங்கநாயகி, இவர் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவரது கணவர் பெயர் ராமச்சந்திரன், 29 வது வார்டு தி.மு.க. செயலாளராக உள்ளார். இவருக்கு குகன் என்ற ஆண் குழந்தையும், வாகிணி என்ற பெண் குழந்தையும் உள்ளது.

மேலும் பேட்டியின்போது, அமைச்சர் கே. என்.நேரு கூறுகையில்;

கோவை மாநகராட்சியின் மேயர் வேட்பாளராக ரங்கநாயகி தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மாநகராட்சிக்குத் தேவையான பணி கள் செய்யப்பட்டு வருகின்றது. இன்னும், மக்க ளின் தேவைகள் அறிந்து பணிகள் வேகப்படுத்தப்படும் என தெரிவித்தார். நாளை கோவை மாநகராட்சி தேர்தல் நடைபெறும் என கூறினார்.

இந்த நிகழ்வின்போது, அமைச்சர் முத்துச்சாமி, மாவட்ட செயலாளர்கள் நா. கார்த்திக், தொ.அ.ரவி, தளபதி முருகேசன், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி, துணைமேயர் வெற்றிச்செல்வன் மற்றும் மண்டல தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.